**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**

**முன்னிலை :– திருமதி.P.கோபால அரசி, B.Sc.,B.L.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06–ம் நாள் வெள்ளி கிழமை,

**<u>இ.ம.எண்.9/2025 in அ.வ.எண்.316/2020</u>**

வேணு கோபாலன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனலெட்சுமி
2. சுகந்தி
3. லெட்சுமணன்
4. வருவாய் வட்டாட்சியர்,
   இலால்குடி.
5. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   திருச்சிராப்பள்ளி.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 03.06.2025 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் நீக்குரவு செய்யப்பட்டுள்ள நிலையிலும், இருதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாதுரைகளை கேட்டும்,

வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில், மேலும் ஒரு சாட்சி விசாரிக்கும் பொருட்டு அசல் வழக்கின் விசாரணையை மறுதிறப்பு செய்ய அனுமதி வேண்டி, உ.வி.மு.ச. பிரிவு 151 கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் இருதரப்பு வாதவுரைக்காக 02.04.2025ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு தொடர்பாக இம்மனுதாரரின் வழக்கறிஞர்கள் விவாதித்த போது மேற்கொண்டு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இம்மனு அனுமதிக்கப்படாவிடில் இம்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும். எனவே வாதி தரப்பு வழக்கு விசாரணையை மறுதிறப்பு செய்யக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–**

(2.1) இம்மனுவில் இந்த எதிர்மனுதாரர்களால் குறிப்பிட்டு ஒப்புக்கொள்ளப்படுகின்ற விஷயங்களை தவிர, ஏனைய விஷயங்களை

மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அசல் வழக்கில் சாட்சியங்கள் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் மீண்டும் இந்த வழக்கில் சாட்சியங்களை விசாரணை செய்வதற்காக ரீஓப்பன் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது இந்த மனுதாரரின் வழக்கை ஏற்றி நடத்துக்கின்ற தெளிவாக சமூக நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்துகிறது.

(2.2) இம்மனுதாரர் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு பதிலாக ஏதாவது ஒரு மனுவை தாக்கல் செய்து வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை தவிர, இந்த மனுவில் குறிப்பிட்ட மனுதாரருக்கு சாதகமான விஷயங்கள் எதுவும் இல்லை. எந்த வகையில் நோக்கினாலும் இந்த மனு ஏற்க தகுந்ததோ அல்லது பரிசீலிக்க தகுந்ததோ அல்ல. எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**4. <u>தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை :-</u>**

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கினை மறுதிறப்பு செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**5. <u>தீர்வு</u>**

(5.1) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 24.11.2020 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 01.03.2023 ல் எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, 30.10.2023

அன்று வழக்கு விசாரணை துவங்கப்பட்டு, 14.06.2024 அன்று வாதி தரப்பு சாட்சியம் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டதன் பேரில் சாட்சியம் முடித்து வைக்கப்பட்டது.

(5.2) பின்னர் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் 24.09.2024 அன்று பி.சா.1 விசாரிக்கப்பட்டும், 24.03.2025 அன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டதன் பேரில் சாட்சியம் முடித்து வைக்கப்பட்டது. இரு தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டு, வழக்கு இருதரப்பு வாதுரைக்காக 27.03.2025 முதல் நிலுவையில் உள்ளது.

(5.3) இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்வதற்காக அசல் வழக்கினை மறுதிறப்பு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மறுக்கப்பட்டுள்ளது. இம்மனுவினை அனுமதிப்பதற்கு போதுமான காரணங்கள் எதுவும் இம்மனுவில் கூறப்படவில்லை. மேலும் மேற்கொண்டு மனுதாரர் தரப்பில் யாரை சாட்சியாக விசாரிக்க முற்படுகிறார் என்று குறிப்பிட்டு கூறவும் இல்லை.

(5.4) இருப்பினும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இருதரப்பினர்களும் தங்களது தரப்பு வழக்கினை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும், இம்மனுவால் எதிர்மனுதாருக்கு ஏற்படும் இன்னல்களை ஈடு செய்ய வேண்டும்

என்பதாலும், இம்மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரிக்க அசல் வழக்கினை மறுதிறப்பு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக இம்மனுதாரர் ரூ.500/-ஐ (ரூபாய் ஐந்நூறு மட்டும்), எதிர்மனுதாரர்களுக்கு 13.06.2025-க்குள் செலுத்த வேண்டும், என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்படி உத்தரவு ரத்தாகிவிடும்.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரி பார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 06ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-P.கோபால அரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>**இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் :-**</u> இல்லை

ஒப்பம்/-P.கோபால அரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.06.06 15:49:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.